**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No: 183/2022** நாள் 23.01.2026.

வாசா.1, திரு.R வேலுச்சாமி

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1, 2 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார் –**

நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ.8 பட்டாவானது பிராது 2ம் தபசில் சொத்துக்கு உரியது என்றால் சரிதான். எங்களது வழக்கானது பிராது 1ம் அயிட்ட சொத்தானது புல எண்.1321/1 என்றால் சரிதான். வாசாஆ.8 பட்டாவில் கண்ட பிராது 2ம் அயிட்ட சொத்துக்கும் பிராது 1ம் அயிட்ட சொத்தான சர்வே எண்.1321/1 க்கும் சம்மந்தம் கிடையாது என்றால் சரிதான். வாசாஆ.9 ஆவணமானது என் தகப்பனார் குன்னூர் விவசாய தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றதற்கான கடன் உறுதி மொழி பத்திரம் என்றால் சரிதான். மேற்படி வாசாஆ.9 ஆவணத்தில் என் தகப்பனாரால் சொல்லப்பட்டுள்ள சொத்தானது என் தகப்பனாருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ.9 ஆவணத்தின் பேரிலான கடன்தொகையினை என் அப்பா திருப்பி செலுத்திவிட்டார் என்பதை காண்பிக்கக்கூடிய ரசீதை நான் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் ரசீது தாக்கல் செய்யவில்லை. ஏற்கனவே இந்த கடனாதை தள்ளுபடி ஆகிவிட்டதாக சாட்சி ஆனவரால் சாட்சி அளிக்கப்படுகிறது. அவ்வாறு கடனானதை தள்ளுபடி ஆகிவிட்டது என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.வாசாஆ.9 அடமான பத்திரத்தின்அசலை நான் நீதிமன்றத்தில் தாக்கல செய்யவில்லை என்றால் சரிதான். கூட்டுறவு வங்கியில் இருந்து அசல் அடமான பத்திரத்தை திருப்பி தருவதில்லை என்று சாட்சி சாட்சியம் அளிக்கிறார். வாசாஆ.10 வில்லங்க சான்றிதழில் முதல் பக்கமானது இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ.10 ஆவணத்தில் கண்டுள்ள மூன்றாவதாக காட்டப்படுள்ள பத்திரமானது என் அப்பா வைத்திருந்த அடமான கடன் பத்திரம் பற்றி சொல்லியுள்ளது என்றால் சரிதான். வாசாஆ.10 ஆவணத்தில் கண்டுள்ள நான்காவதாக காட்டப்படுள்ள இணைப்பானது நான் அடமானம் வைத்துள்ள வாசாஆ.11 க்கான கடன் உறுதி மொழி பத்திரம் பற்றியது என்றால் சரிதான். வாசாஆ.11 ஆவணப்படியான கடன் தொகையினை நான் திருப்பிவிட்டேன் என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. சாட்சியானவரால் தன்னால் ஆவணத்தை தாக்கல் செய்ய முடியும் என்று சாட்சியம் அளிக்கிறார். வாசாஆ.10 வில்லங்க சான்றிதழில் மேற்படி நான் வாசாஆ.11 ன் பேரிலான அடமான கடனை திருப்பியதற்கான குறிப்புகள் எதுவும் துலங்கவில்லை என்றால் சரிதான். வாசாஆ.10 வில்லங்க சான்றிதழில் ஐந்தாவதாக காட்டப்படுள்ள பதிவானது அய்யனார் என்பவர் கலசலிங்கம் கல்லூரிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்திற்கான பதிவு என்றால் சரிதான். மேற்படி பதிவில் புல எண்கள்.1321/1 மற்றும் 1321/4 க்குரியதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் புல எண்.1321/1 க்குரிய விஸ்தீரணத்தை பற்றி சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

வாசாஆ.10 வில்லங்க சான்றிதழில் மொத்தம் 7 பதிவுகளை பற்றி சொல்லியுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாசாஆ.10 ஆவணத்தில் 1, 2, 6, 7 பதிவுகள் பற்றி சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி பதிவுகளை சேர்த்து தாக்கல் செய்யாமல் இருந்ததன் காரணம் என்னவென்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ.11 அடமான கடன் பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களானது என் அப்பாவுக்கு பாத்தியப்பட்டது என்றோ, அல்லது எனக்கு பாத்தியப்பட்டது என்றோ சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பிராது 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்தமட்டில் வழக்கில் உள்ள 2ம் வாதி , 2ம்வாதியின் தகப்பனார், 2ம் வாதியுடன் பிறந்த சகோதர சகோதரிகள் யாரும் எனக்கு கிரையமாகவோ, நன்கொடை மூலமாகவோ, உயில் ஆவணம் மூலமாகவோ எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது கட்சியானது எனக்கு பாத்தியம் என்றும் சொல்லும் சொத்துக்களானது என் தகப்பனார் இறந்த பிறகு 2010ம் ஆண்டு என் சகோதர சகோதரிகள் , எனக்கு வாய்மொழியாக விட்டுக்கொடுத்துள்ளார்கள்என்ற நிலைப்பாடு என்றால் சரிதான். என் பெயரில் பட்டாவோ, 10(1)அடங்கலோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு வாய்மொழியாக என் சகோதர சகோதரிகள் பிராது சொத்துக்களை விட்டுக்கொடுத்துள்ளார்கள்என்று சொல்லும் போது நாளது தேதி வரையிலும் பிராது சொத்துக்களை பொறுத்துநான் தனிப்பட்ட முறையில் என் பெயரில் எந்தவிதமான வில்லங்க பராதினம் ஆவணம்எதுவும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரிதான். வாசாஆ.8 ஆவணப்படிக்கு பட்டா எண் ஆனது 1104 என்றால் சரிதான். அந்த பட்டாக்குரிய சர்வே எண்.1321/3 என்றும் பிராது 2 ம் அயிட்ட சொத்து என்றால் சரிதான்.நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ.16 மற்றும் வாசாஆ.17 தீர்வை ரசீதுகளில் பட்டா எண் 1104 என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பிராது 1ம் அயிட்ட சொத்துக்கும் வாசாஆ 16 மற்றும் 17 ரசீதுகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. பிராது 1ம் அயிட்ட சொத்தான சர்வே எண்.1321/1க்கான தீர்வை ரசீதுகள் வாசாஆ.16 மற்றும் வாசாஆ.17 இல்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் கிராம நிர்வாக அதிகாரி அப்படி தான் போட்டுக்கொடுத்துள்ளார். வாசாஆ.18 கிரைய ஆவணமான 1ம் எதிர்வாதி பெயரிலான 1985ம் ஆண்டு ஏற்பட்ட சமயத்தில் என் அப்பாவுக்கு தெரியும் என்று சொன்னால் ஒத்தி ஆவணம் என்று சொல்லி தான் எழுதி உள்ளார்கள் என் அப்பாவுக்கு அந்த ஆவணமானது கிரைய ஆவணம் என்று அப்போது தெரியாது. 6 வருடம் கழித்து என் அப்பா போய் ஒத்தியை பற்றி கேட்ட போது 1985ம் ஆண்டு கிரையம் ஏற்பட்டுவிட்டதாக 1ம் எதிர்வாதியானவர் சொல்லியதாக சாட்சி சாட்சியம் அளிக்கிறார். என்னுடைய கட்சியானதும் என்அப்பாவுக்கு 1991ம் ஆண்டு வாக்கிலேயே மேற்படி வாசாஆ.18 கிரைய ஆவணம் பற்றி தெரியும் என்பதாகும். வாசாஆ 18 கிரைய ஆவணத்தில் வழக்கில் உள்ள 2ம் வாதியின் தகப்பனார் P.ராமசாமிதேவர் என்பவர் தான் எழுதிக்கொடுத்துள்ளதாக உள்ளது என்று சொன்னால் ஆவணத்தில் அவ்வாறு தான் சொல்லியுள்ளது. வாசாஆ.18 ல் கண்டுள்ள வாசங்களை நான் படித்து பார்த்தேன் அதில்

உள்ள வாசகங்கள் அனைத்தும் சரிதான். வாசாஆ.18 ஆவணத்தில் கண்ட சாட்சிகள் அன்னக்கொடி, சிவராமதேவரும் நான் சிறுவயதில் இருந்த போது அவர்களை பார்த்துள்ளேன். அன்னக்கொடி என்பவர் தற்போது உயிருடன் உள்ளரா என்று எனக்கு தெரியாது. சிவராமதேவர் சுமார் 2001ம் வாக்கில் இறந்துபோனார். வாசாஆ.18 கிரைய ஆவணமானது மோசடியானது என்று சொல்லி நானோ, என் தகப்பனாரோ, 2ம் வாதியோ, 2ம் வாதியின் தகப்பனாரோ எந்த விதமான புகார் மனுவும் 1ம் பிரதிவாதி மீது கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாசாஆ.18 கிரைய ஆவணமானதை ஆள்மாறாட்டம் செய்து பதிவு செய்யப்பட்டதாக எனது கட்சி கிடையாது என்றால் சரிதான். 2ம் வாதியின் தகப்பனார் சரியான ஆவணங்களை தான் எழுதிக்கொடுப்பார் என்று சொன்னால் அப்படியில்லை. வாசாஆ.18 ஆவணமானது பிராது 1ம் தபசில் பொறுத்து 1ம் எதிர்வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதும் எங்களுக்கு தெரிந்திருந்து ஏற்படுத்தப்பட்ட வாசாஆ.9, வாசாஆ.11 ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் அது சரியல்ல. வாசாஆ.18 ஆவணப்படிக்கு பிராது 1ம் தபசில் சொத்தானதை 1ம் எதிர்வாதிக்கு பாத்தியப்பட்டு 1ம் எதிர்வாதி அனுபவத்தில் தான் இருந்துள்ளது என்றால் அது சரிதான். அவர் சார்பாக சில ஆண்டுகள் பொன்னுச்சாமி என்பவர் பிராது 1ம் அயிட்ட சொத்தில் கட்டுக்குத்தகையை பார்த்து வந்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அப்போது வெளியூரில் தான் இருந்தேன். வாசாஆ.18 ஆவணப்படிக்கு பிராது ஏ தபசில் சொத்தின் அனுபவம் குறித்தும் , ஆவணங்களை சரிபார்த்தும் சொத்தின் உரிமை குறித்தும், பார்த்தும் 1ம் எதிர்வாதியிடமிருந்து 2ம் எதிர்வாதி வாசாஆ.19 மூலம் கிரையம் பெற்றார் என்று சொன்னால் கிரையம் பதிந்துள்ளார். 2020ம் ஆண்டு வாசாஆ.19 ஆவணப்படிக்கு 2ம் எதிர்வாதி கிரையம் பெற்ற காலம் முதல் இன்றுவரையிலும் அவர் தான்அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான் நான் சட்டப்படியாக இந்த வழக்கு மூலமாக நடவடிக்கை எடுத்துள்ளேன். எனவே வாசாஆ.18 மற்றும் 19 ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தகுந்தவை என்றும் வாதிகளை கட்டுப்படுத்தும் என்று சொன்னால் அது சரியல்ல. வாசாஆ.20 ஆவணமானதை விருதுநகர் மாவட்ட பதிவாளரிடம் நான் கொடுத்த மனுவின் நகல் என்றும் அதில் வாசாஆ.18 மற்றும் வாசாஆ.19 ஆவணங்களை ரத்து செய்யவேண்டும் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ.20 ஆவணத்தில் கூறி விபரங்கள் அனைத்தும் சரிதான். வாசாஆ.20 ஆவணத்தில் மேற்படி 2ம்வாதியின் தகப்பனாரின் சம்மதத்தின் பேரில் தான் என் அப்பா பெயருக்கு பட்டா பெயர் மாறுதல் ஆனது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த ஆண்டு யார் முன்னிலையில் 2ம் வாதியின் தகப்பனார் சம்மதம் தெரிவித்தார் என்று வாசாஆ.20 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 2ம்வாதியின் தகப்பானர் பிராது 1ம் அயிட்ட சொத்தை பொறுத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று எந்த ஆவணம் பற்றியும் வாசாஆ.20 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ.20 மனுவின் பேரில் உடனடியாக மாவட்ட பதிவாளர் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லி வாசாஆ.21

நீதிப்பேராண்மை மனுவை நாங்கள் தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான். வாசாஆ.21 ஆவணப்படியான மனுவுக்கு எங்கள் தரப்பையும் 1, 2 எதிர்வாதிகளையும் விசாரித்து உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று சொன்னால் 2000 ம் ஆண்டு முன்பு உள்ள தாவா பற்றி எங்களால் விசாரிக்க முடியாது என்றும் அதை நீதிமன்றம் மூலமாவே தீர்த்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லியிருந்தார். வாசாஆ.20 ஆவணத்தின் உத்தரவின் அசல் தான் என்னிடத்தில் காண்பிக்கப்படுபவை என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ.1.** மேற்படி வாசாஆ.20 ஆவணப்படியான உத்தரவினை எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 2 ம் எதிர்வாதியானவர் தன் பெயருக்கு பிராது 1 ம் அயிட்ட சொத்தானது கிரையம் பெற்ற பின்பு தன் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்து கொடுக்க வேண்டி அவர் சிவகாசி கோட்டாட்சியரிடம் மனு கொடுத்திருந்தா'ர என்றால் சரிதான். மேற்படி மனுவின் அடிப்படையில் என்னையும் 2 ம் எதிர்வாதியையும் சிவகாசி கோட்டாட்சியர் விசாரணை செய்தார் என்றால் சரிதான். அவர் விசாரித்து உத்தரவு பிறப்பித்து அதில் விருதுநகர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு பரிந்துரை செய்துள்ளார் என்றால் சரிதான்.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டி வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது. )**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 23rd day of January 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.